Registered as a Newspaper

A|L சனி, ஞாயிறு
வகுப்புகள்
Chemistry: - Mr. மகாதேவா
வெப்ப இரசாயனம்
Physics - Mr. நந்தகுமார்
வெப்பவியல்
ஆரம்பம்: 9 - 2 - 86
Bond Institutes
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை ரூ. 1/=

A|L 88
Chemistry: Mr. மகாதேவா
Physics: Mr. நந்தகுமார்
Zoology: Mr. K. சிவபாதம்
Botany: Mr. ஜங்கரநேசன்
Pure Maths: App Maths: Mr. ஆறுமுகம்
ஆரம்பம்: 9—2—86
Bond Institutes
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

ஏடர்:- 1 யாழ்ப்பாணம் குரோதன ஞூ தை மீ° உ 27 ஞாயிற்றுக்கிழமை ஹிஜ்ரி 1406 ரபி. ஐ. அவ். பிறை 29 (09.02.1986) UTHAYAN —A LIVELY TAMIL DAILY கதிர்:-71

இனப்பிரச்சினை:

# ராஜீவுடன் பேச்சுக்கு அனுமதி மறுப்பு!

## லலித்தை மாலைதீவு அனுப்ப எடுத்த முயற்சி தோல்வி

புதுடில்லி, பெப்.8

தமது அமைச்சர் ஒருவரை மாலைதீவுக்கு அனுப்பி அங்கு விஜயம் செய்திருந்த இந்தியப்பிரதமர் திரு. ராஜீவ் காந்தியுடன் இலங்கை இனப்பிரச்சினை சம்பந்தமாக பேசுவதற்கு வகை செய்யுமாறு இலங்கை அரசு விடுத்த வேண்டுகோள் நிராகரிக்கப்பட்டது.

தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலியை மாலைதீவுக்கு அனுப்பி பிரதமர் ராஜீவுடன் பேச்சு நடத்த இலங்கை அரசு தீவிரமாக முயற்சித்தது ஆனால் அது பலனளிக்கவில்லை.

வெளியுறவுச் செயலாளர் திரு. ரொமேஷ் பண்டாரி இலங்கை விஜயத்தைத் திடீரென்று ரத்துச் செய்தது இலங்கை அரசுக்கு அதிர்ச்சியைக் கொடுத்தது

அதைத் தொடர்ந்து பிரதமர் ராஜீவ் காந்தியை சந்திக்க தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு லலித் அத்தலத்முதலியை அனுப்ப இலங்கை அரசு தீர்மானித்தது

திரு. ராஜீவ் காந்தி மாலைதீவு செல்லும் சமயம் அங்கு வைத்து அவரைச் சந்திக்க திரு லலித் அத்துலத்முதலியை அனுப்ப இலங்கை அரசு எண்ணியது.

அதுசம்பந்தமாக இந்திய அரசுடன் தொடர்பு கொண்டது

இனப் பிரச்சினைக்கு இராணுவத்தீர்வு காணப்படவேண்டும் என்பதில் வெளிப்படையாக இயங்குபவர் திரு. அத்துலத்முதலி. அவருடன் இந்தச் சமயத்தில் பேசுவது சரியாக இராது—இப்படி பிரதமர் ராஜீவ்காந்திக்கு ஆலோசனை வழங்கப்பட்

(4 ஆம் பக்கம் பார்க்க)



முச்சந்திமுரளி

இந்தியா பேசக் கேட்கையிக்கை இவையும் 'கெப்போர்' காட்டிக் கொண்டு திரிஞ்சவை எல்லே. இப்ப தான் அவை குடு தெரியும்.

## ஆக்யுனேவுக்கு 54 வீத வாக்கு

மணிலா, பெப். 8

பிலிப்பீன்ஸ் ஜனாதிபதி தேர்தலில் திருமதி அக்யுனோ 54 சதவீத வாக்குகளைப் பெற்றிருப்பதாக, தேர்தலைக் கண்காணிக்கச் சென்ற அமெரிக்கக் குழு தெரிவித்துள்ளது.

எனினும் இதனை மார்க்கோஸ் ஏற்கவில்லை.

## பொதுமக்கள் தாக்கப்பட்டனர்

யாழ்ப்பாணம், பெப் 9

நேற்று வவுனியா -மன்னார் பகுதியில் ஆயுதப் படையினர் ரோந்து வந்தபோது பொது மக்கள் பலர் தாக்கப்பட்டனர்.

## மானபங்கம் செய்ததாக புகார்

திருகோணமலை, பெப் 9

சீருடையினரால் தாம் மானபங்கப்படுத்தப் பட்டதாக இரண்டு திருமணமான இளம் தமிழ்ப் பெண்கள் நேற்று திருமலை பிரஜைகள் குழுவிடம் முறையிட்டனர். மூதூர்த் தொகுதியில் கட்டைப்பறிச்சானைச் சேர்ந்தவர்கள் இப் பெண்கள்.

படையினரின் கொடுமைகளால் கட்டைப்

(4ஆம் பக்கம் பார்க்க)

திருமலையில்

# இளம்பெண்கள் 42 பேர் கைது

— திருகோணமலை மாவட்டச் செய்தியாளர் —

திருகோணமலை, பெப். 9

திருகோணமலையில் மூதூரைச் சேர்ந்த 42 தமிழ் இளம் பெண்களைப் பாதுகாப்புப் படையினர் நேற்றுக் காலை ஒரே வேளையில் கைது செய்தனர். இவர்கள் இந்து, கிறிஸ்தவப் பெண்கள்.

அதனால் அப்பகுதிகளில் பெரும் பீதியும் பதற்றமும் ஏற்பட்டுள்ளது.

வியாழக்கிழமை (6 . 2 . 86) பாதுகாப்புப் படையினர் யோகராசா வதனி என்ற இளம் பெண்ணைக் கைது செய்தனர்.

அதைத் தொடர்ந்தே நேற்று 42 தமிழ் இளம் பெண்களும் கைதாகினர்.

இதனிடையில், வியாழன் கைதான வதனி, காயங்களுடன் மூதூர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

நேற்றுக் கைதான 42 பெண்களில் ஒரு பகுதியினர், திருமலைக் கடற்படை முகாமில் தடுத்து வைக்கப்பட்டனர்.

மிகுதிப்பேர் கோட்டை இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டனர்.

பெருந்தொகையான பெண்கள் கைது செய்யப்பட்டது மூதூர்ப் பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பெற்றோர்கள், கணவன்மார்கள் நேற்று இது சம்பந்தமாக திருகோணமலை பிரஜைகள் குழுவுக்கு முறையிட்டனர்.

## சரக்கு ரயிலிலிருந்து பொருள்கள் அபகரிப்பு

யாழ்ப்பாணம், பெப்.9

கொழும்பில் இருந்து வந்த சரக்கு ரயில் ஒன்று கொக்குவில் ரயில் நிலையத்துக்கு அண்மையில் வைத்து கொள்ளை அடிக்கப்பட்டது.

ரயிலுக்குள் ஏறிய ஆயுதம் தாங்கிய கோஷ்டி ஒன்று ரயிலில் இருந்து பசளை, தவிடு உட்பட பல பொருள்களை அபகரித்தது.

இந்தப் பொருள்கள் லொறி ஒன்றில் ஏற்றிச் செல்லப்பட்டன என்று நம்பப்படுகிறது.

### செய்திச் சாரம்

## அமெரிக்கா வீட்டோ

ஐ நா, பெப். 8

லிபிய விமானத்தைக் கடத்தியதுக்காக இஸ்ரவேலுக்கு எதிராக ஐ. நா. பாதுகாப்புச் சபையில் கொண்டுவரப்பட்ட கண்டன தீர்மானத்தை அமெரிக்கா தனது ரத்து அதிகாரம் மூலம் வீட்டோ செய்தது.

## அலரிக்காய் சாப்பிட்ட மூவர்

யாழ்ப்பாணம், பெப்.9

அலரிக்காய் சாப்பிட்ட இரு சிறுமிகளும் ஒரு சிறுவனும் நேற்று யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர்.

பி. சுதாகர் (8 வயது) என். சுதர்சினி (6 வயது) என் உமாரதி (7 வயது) ஆகியோரே இம்மூவரும் ஆவர்.

இவர்கள் அச்சுவேலியைச் சேர்ந்தவர்கள்.

## தமது தாயகத்தில் ஒன்றுக வாழ்வதே தமிழர் விருப்பம்

### லலித்துக்கு அமிர் பதில்

சென்னை, பெப் 8

ஒரே தாயகத்தில் மீண்டும் ஒன்று சேர்ந்து வாழவே இலங்கைத் தமிழர் விரும்புகின்றனர்.

இப்படி தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலதிபர் திரு. அ. அமிர்தலிங்கம் சொன்னார்.

வடக்கு - கிழக்கைக் கைவிட்டால்தான் கூட்டணியுடன் பேச்சு என்று அமைச்சர் லலித் அத்துலத் முதலி கூறியிருப்பது குறித்து திரு. அமிர்தலிங்கம் கருத்து வெளியிட்டார்.

பிரிட்டிஷார் வருவதற்கு முன்னர் இலங்கையில் தமிழர் ஒரே தாயகத்தில் தான் வாழ்ந்தனர்.

பிரிட்டிஷ் ஆட்சிக்கு பின்னர்தான் வடக்கு –

(4–ம் பக்கம் பார்க்க)

### ராஜீவ் - கையூம் கூட்டறிக்கை

மாலைதீவு, பெப். 8

இலங்கை இனப் பிரச்சினைக்கு பேச்சுக்கள் மூலம் தான் தீர்வுகாணப்பட வேண்டும்.

இராணுவத் தீர்வு மூலம் முடியாது.

இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியும் மாலைதீவு ஜனாதிபதி அப்துல் கையூமும் கூட்டாக விடுத்த அறிக்கையில் இப்படிக் கூறப்பட்டுள்ளது.

### மூதூர் சம்பவம்

யாழ்ப்பாணம் பெப்9

கடந்த 5 ஆம் திகதி மூதூரில் நடைபெற்ற தாக்குதலில் ஆயுதப் படையைச் சேர்த 9 பேர் மரணமடைந்தனர் என்று தமிழீழ விடுதலை புலிகள் இயக்கம் தெரிவித்துள்ளது.

ஹெலிக்கொப்டர் ஒன்று சுட்டு வீழ்த்தப் பட்டதாகவும் அதிலிருந்த மூவர் இறந்ததாகவும், காயம் அடைந்தவர்களில் ஒருவர் வெளிநாட்டவர் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது அந்த வெளிநாட்டவருக்கு கொழும்பில் சத்திர சிகிச்சை செய்யப்பட்டதாகவும் கூறப்பட்டுள்ளது.

கடல் கண்ணிவெடியில்

## கடற்படைக் கப்பல் பலத்த சேதம்!

### புலிகள் இயக்கம் அறிக்கை

சென்னை, பெப். 8

கடல் கண்ணிவெடியில் காரைநகர்க் கடற்படை முகாமிற்கு உரிய நவீன கடற்படைக் கப்பல் ஒன்று பலத்த சேதமடைந்தது.

இச்சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை (7-2-86) காலை 10-00 மணிக்கு நடந்தது.

இப்படி தமிழீழ விடுதலைப் புலிகள் விடுத்த அறிக்கை ஒன்றில் விபரம் தெரிவிக்கப்பட்டது.

கடற்கோட்டைக்கும் காரைநகர் கடற்படை முகாமுக்கும் இடையே உள்ள கடல்பகுதியில் வைக்கப்பட்ட கண்ணிவெடியே வெடித்தது

சேதம் அடைந்த கப்பல், ஏனைய கப்பல்களினதும் ஹெலிக்கொப்டர்களினதும் உதவியுடன் மிகுந்த சிரமத்தில் மீட்கப்பட்டது.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் முதல் தடவையாக நவீன முறையில் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்ட கடல் கண்ணிவெடித் தாக்குதல் இது.

இப்படி தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தனது அறிக்கையில் கூறியுள்ளது.

## குண்டு வெடித்த போது கமலநாதன் அலறியபடி கடலில் சாய்ந்தார்

### காரைநகர் சம்பவம் பற்றி தகவல்

நல்லூர், பெப். 9

எமது கட்டுமரத்துக்கு சமீபத்தில் குண்டு விழுந்து வெடித்தபோது அதனை ஓட்டிவந்த கந்தசாமி கமலநாதன் அலறிக்கொண்டு கடலில் சாய்ந்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை ஊர்காவற்துறை கடற்பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கி வேட்டுக்களின் போது கந்தசாமி கமலநாதன் (18 வயது) என்ற இளைஞர் பலியானார்.

இவரது மரண விசா

(4.ஆம் பக்கம் பார்க்க)

## லொறி கடத்தல்

யாழ்ப்பாணம், பெப் 9

கொழும்பிலிருந்து பொருள்கள் ஏற்றி வந்த லொறி ஒன்று நேற்று சாவகச்சேரியில் வைத்துக் கடத்தப்பட்டது.

அந்த லொறிக்குள் சுமார் 15 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் இருந்ததாக மதிப்பிடப்பட்டுள்ளது.

### சுபநேரம்

9.2.1986

ஞாயிற்றுக்கிழமை

சுபநேரம்:

9.35 முதல் 11 05 வரை

ராகுகாலம்:

5.05 முதல் 6.35 வரை

இலை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

# பருத்தித்துறையில் நேற்று நேரடிச் சமர்!

## ஆயுதப்படையினர் நால்வர் காயம்

யாழ்ப்பாணம், பெப்.9

ஆயுதப்படையினருக்கும் போராளிகளுக்கும் இடையில் பருத்தித்துறையில் நேற்று நடந்தநேரடி மோதலில் ஆயுதப்படையைச் சேர்ந்த நால்வர் காயம் அடைந்தனர் என்று தெரியவருகிறது.

காயம் அடைந்தவர்கள் உடனடியாக ஹெலிக்கொப்டர்மூலம் அனுராதபுரம் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

நேற்று பிற்பகல் 3.30 மணி அளவில் பருத்தித்துறை இராணுவமுகாமில் இருந்துமோட்டோஷெல்கள் நகரை நோக்கி ஏவப்பட்டன.

போராளிகள் பதில் தாக்குதல் நடத்திய போதே ஆயுதப்படையினர் நால்வர் காயம் அடைந்தனர்.

துப்பாக்கிச் சூட்டுச்சத்தங்களும், குண்டுவெடிப்புகளும் அப்பகுதியில் நேற்று பெரும் பதற்ற நிலையைத் தோற்றுவித்திருந்தது.

## யாழ். நகர் வர்த்தகர் இருவர் கடத்தப்பட்டனர்

### பெண் கடத்தலைக் கண்டித்து கடையடைப்பு

நல்லூர் பெப்.9

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இரண்டு வர்த்தகர்கள் நேற்று முன்தினம் இனந்தெரியாத கோஷ்டிகளினால் கடத்தப்பட்டனர்.

செல்லப்பா அன் கோ உரிமையாளர் செல்லப்பா சிறிஸ்கந்தராசா சம்பவதினம் அவரது கடையில் இருந்த சமயம் ஆயுதந்தாங்கிய கோஷ்டி

(4.ஆம் பக்கம் பார்க்க)

## கணேசலிங்கத்தின் பூதவுடல் மட்டக்களப்பு வந்தது

### நாளை இறுதிச் சடங்குகள்

– மட்டக்களப்பு மாவட்டச் செய்தியாளர் –

மட்டக்களப்பு, பெப்.9

பட்டிருப்பு முன்னாள் எம். பி திரு. பூ. கணேசலிங்கத்தின் பூதவுடல் நேற்று நண்பகல் மட்டக்களப்பு தாமரைக்கேணி இல்லத்துக்கு கொண்டு வரப்பட்டது.

நாளை திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு மட்டக்களப்பில்உள்ள கல்வியங்காட்டில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

பூதவுடல் விமான மூலம் வெள்ளிக்கிழமை இரவு 11 மணியளவில் கட்டுநாயக்காவில் உள்ள கொழும்பு சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தது.

பூதவுடலுடன் காலஞ்சென்ற திரு. கணேசலிங்கத்தின் மனைவியும் இரு

(4.ஆம் பக்கம் பார்க்க)

## மயானத்தில் சடலங்கள்

யாழ்ப்பாணம், பெப்.9

காக்கைதீவை அண்டியுள்ள மயானம் ஒன்றில் இனந்தெரியாத இரண்டு சடலங்கள் கிடக்கக் காணப்பட்டன

இவை நிலத்திற்குள் சரியாக புதைக்கப்படாததால் நேற்று வெளியே தெரிந்ததாம். மக்கள் அவற்றைக் கூடி நின்று வேடிக்கை பார்த்தனர்.

## ★ இப்படியும் ஒரு வரவேற்பு

கொழும்பு, பெப். 9

யாழ்ப்பாணத்தில் நடத்தத் திட்டமிட்டுள்ள பிரார்த்தனையை அமைதியாக நடத்துமாறும் அதனை வரவேற்பதாகவும் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்திருக்கிறது.

ஆனால் மக்களைப் பாதுகாக்க உருவாக்கப்பட்ட பாதுகாப்பு வலயத்தை ஆட்சேபித்து அந்த இயக்கத்தைச் செய்ய வேண்டாம், என்று அமைச்சு கேட்டிருக்கிறது.

INTRODUCING
A Modern Medical
Laboratory in Jaffna
நவீன மருத்துவ ஆய்வுகூடம்
யாழ்நகரில் ஆரம்பம்
DIAGNOLABS
டயக்னோலப்ஸ்
மருத்துவ ஆய்வுகூட சேவை
மருத்துவ நிபுணர்கள், வைத்தியர்கள், நோயாளர்கள் கவனத்திற்குரியது.
இரத்தம், சிறுநீர், மலம் மற்றும் சரீர நீர்களின் பரிசோதனைகள் தேர்ச்சிபெற்ற மருத்துவ ஆய்வுகூட இயலாளர்களினால் மருத்துவ ஆய்வுகூட நிபுணரின் ஆலோசக அனுசரணையுடன் ஏற்றுக்கொள்ளப்படும்.
உங்கள் வசதிக்காக இச்சேவை யாழ். பெரிய ஆஸ்பத்திரியின் முன் அமைந்துள்ளது.
இங்கு நீங்கள் துரிதமான, தரமான சேவையைப் பெறுவீர்கள்.
574/1, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெருமை தேடித் தந்த தேவிஸ்ரீயின் நீல நிறச்சேலை

"பிரேம விஜயம்" என்ற தெலுங்குப் படம் மூலம் திரையுலகுக்கு அறிமுகமானவர் தேவிஸ்ரீ தமிழ்த் திரையுலகுக்கு "வாங்க மாப்பிள்ளை வாங்க" மூலம் அறிமுகமானவர்.

அவர், தான் அணியும் உடைகளைப் பற்றி விளக்குகிறார். இங்கே:

"என்னைப் பொறுத்தவரை வெள்ளை, நீல நிறப் பாவாடை, தாவணி, சேலை என்ருல் படு ராசி! நீல நிறச் சேலை ஒன்றை

தினசரி சினிமா

எனக்கு அப்பா பிறந்த நாள் பரிசாக வாங்கித் தந்திருந்தார்.

அந்தக் குறிப்பிட்ட சேலையைக் கட்டிக் கொண்டு முதன் முறையாக டைரக்டர் சந்திரசேகரைப் பார்க்கப் போனேன் "குடும்பம்" படத்தில் நடிக்க வாய்ப்புக் கிடைத்தது.

இன்னும் ஒருமுறை டைரக்டர் மாதவன் அவர்களைப் பார்க்கப் போனேன். அன்றும் அந்த சேலையைத் தான் கட்டி இருந்தேன். அவரின் 'கொலுப் பொம்மை' படத்தில் வாய்ப்புக் கிடைத்தது.

இப்படி பல படங்களில் நடிக்கும் வாய்ப்பை அந்த நீல நிறச் சேலை தான் பெற்றுக் கொடுத்தது.

முதன் முதல் நான் சேலை கட்டி நடித்தது 'பிரேம விஜயம்' தெலுங்குப் படத்தில் தான். அதுவும் முதலிரவுக் காட்சி.

எனக்கோ சேலை கட்டி நடிக்க பயமாக இருந்தது. என் தாயார் சேலை கட்ட உதவினர்.

முதலிரவுக் காட்சியை படமாக்க ஆரம்பித்தார்கள். நடித்துக் கொண்டிருக்கும் போது திடீரென சேலை அவிழ்ந்து விட்டது.

நாணத்தால்உடம்பு வியர்க்கத் தொடங்கியது. சேலையை வாரிப் பிடித்துக் கொண்டு அம்மாவை அழைத்தேன்.

அருகில் நின்ற டான்ஸ் மாஸ்டர் கிருஷ்ணமூர்த்தி குறுக்கிட்டு, உதவியாளர் மூலம் சேலையைக் கட்டச் செய்தார். பின் காட்சி படமாக்கப்பட்டது.

அந்தச் சூழ்நிலையில் ஏற்பட்ட மனக் கஷ்டத்தை எண்ணி, அன்று இரவே என் தாயார் மூலம் சிரமப்பட்டு சேலை கட்டிப் பழகினேன்.

அன்று சேலை அவிழ்ந்த போது ஏற்பட்ட வேதனையை நினைத்தால், சிரிப்புத் தான் வருகிறது என்ருர்.

## தட்சருக்கு எதிராக ஹீத் போர்க் கொடி

லண்டன், பெப்.8

பிரிட்டனின் ஆளும் கன்சர்வட்டிவ் கட்சிக்குள் பிரதமர் மார்கரட் தட்சர் பலத்த எதிர்ப்பைச் சமாளிக்க வேண்டிய நிலைக்கு ஆளாகியுள்ளார்.

முன்னுள் பிரதமர் எட்வர்ட்ஹீத் இந்த எதிர்ப்புக்குத் தலைமை வகிக்கின்ருர்.

திரு ஹீத்துக்கு 40 எம்.பிக்கள் ஆதரவு வழங்குகின்றனர்.

பிலிப்பீன்ஸில் வெற்றி யாருக்கு?

# தேர்தல் முடிவு குழப்பநிலையில்

மணிலா, பெப்.8

பிலிப்பீன்ஸ் ஜனதிபதி தேர்தல் முடிவுகள் வெளிவருவதில் குழப்பமும் பதற்றமும் நிலவுவதாக பி. பி. சி அறிவித்தது.

சிறிதளவு வாக்குகள் எண்ணப்பட்ட நிலையில் எதிர்க்கட்சி வேட்பாளர் திருமதி. கொரஸோன் அக்கூனே முன்னணியில் இருப்பதாக அவரின் ஆதரவாளர்கள் குறிப்பிட்டனர்.

அதே நேரத்தில் ஜனதிபதி பெர்டினண்ட் மார்கோஸ்பத்துச்சதவீத அதிக வாக்குகள் பெற்று முன்னணியில் நிற்பதாக அவரின் ஆதரவாளர்கள் அறிவித்தனர்.

இதனிடையில் தேர்தல் முடிவுகளை அறிவிப்பதில் வேண்டும் என்று கால தாமதம் காட்டப்படுவதாக அமெரிக்காவில் இருந்து சென்ற அவதானிகள் குழு அறிவித்தது.

தேர்தல் முடிவுகளை அறிவிப்பதில் தாமதம் காட்டப்படுவது, நாட்டில் வன்செயல்களை ஊக்குவிப்பதாக அமைந்திருக்கிறது என்றும் கூறப்பட்டது.

அதே நேரத்தில் தேர்தலில் மோசடிகள் இடம்பெற்றதாக இருதரப்பினரும் குற்றஞ் சாட்டினர்.

## சவூதி: வெளிநாட்டவர் வேலை பெறுவது 1990 இல் நிறுத்தப்படும்

ரியாட், பெப்.8

சவூதி அரேபியாவில் வெளிநாட்டார் வேலை பெறுவது 1990 ஆம் ஆண்டுடன் நிறுத்தப்பட்டு விடும்.

இப்படி சவூதி அரேபியாவில் இருந்து வெளிவரும் அல்ஷா பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இப்பொழுது 6 லட்சம் வெளிநாட்டார் சவூதி அரேபியாவில் வேலை செய்கின்றனர்.

1990 ஆம் ஆண்டில் 3 லட்சத்து 75 ஆயிரம் சவூதி தொழிலாளர்கள் மட்டுமே வேலைசெய்வர். வெளிநாட்டவர்கள் திருப்பி அனுப்பப்பட்டு விடுவர்.

இப்படி அப்பத்திரிகைச் செய்தி கூறுகின்றது.

## கறுப்பரும் வெள்ளையரும் கலந்து கற்பதா?

### அந்தப் பேச்சுக்கே இடமில்லை என்கிருர் கிளார்க்

ஜோகானஸ்பேக், பெப் 8

கறுப்பின மாணவர்களுடன் வெள்ளை இனத்தவரின் பிள்ளைகள் சேர்ந்து கற்பது என்ற பேச்சுக்கே இடமில்லை.

மேற்கண்டவாறு பிறிட்டோரிய அரசின் கல்வி அமைச்சர் கிளார்க் தெரிவித்துள்ளார். பத்திரிகையாளர் மாநாடொன்றிலேயே இந்தக் கருத்தை கல்வி அமைச்சர் வெளியிட்டார்.

தென் ஆபிரிக்க இனவாத அரசு கறுப்பினத்தவருக்கெதிரான ஒரு தலைப்பட்ச கல்விக் கொள்கையை கடைப்பிடித்து வருகிறது.

இந்தக் கொள்கைகளால் இழிவுபடுத்தப்பட்டு வரும் கறுப்பின மாணவர்கள் பாடசாலைகளைப் பகிஸ்கரிப்பில் ஈடுபட்டுவந்தது தெரிந்ததே.

## வெளி உலகில்

### சீனவில் ஆங்கிலம் பேசுபவர்களுக்கு தனி மதிப்பு

பீகிங், பெப். 8

சீனவில் ஆங்கிலம் பேசுபவர்களுக்குத் தனி மதிப்பு

பீகிங் நகரில் எங்காவது ஒரு மூலையில் ஒருவர் ஆங்கிலத்தில் பேசத் தொடங்கினல் போதும், அவரைச் சுற்றிக் கூட்டம் கூடிவிடும்.

இந்நிகழ்ச்சி சீனவில் அதிகரித்து வருகிறது. இதனல் ஆங்கிலம் கற்கும் மோகம் சீனவில் அதிகரித்து வருகிறது.

ஆங்கிலக் கல்வி, சீனமக்களுக்குப் புது உலகம் ஒன்றைக் காட்டுகிறது - இப்படி வெளிநாட்டு மொழிகள் பயிற்சி நிலையப் பேராசிரியர் லியுன் சொன்னர்.

### எண்ணெய் விலை குறைப்பு

புதுடில்லி, பெப். 8

இந்திய அரசு எண்ணெய் விலையைக் குறைத்தது.

பொதுசன எதிர்ப்பைத் தொடர்ந்து எண்ணெய் விலையைக் குறைக்க இந்திய அமைச்சரவை தீர்மானித்தது.

20 முதல் 40 சதவிதம் வரையிலான விலை குறைப்பு இடம் பெறும்.

விலையைக் கூட்டியதற்கான காரணங்கள் உண்மையானவை. நடுத்தர வர்க்க மக்களுக்கு நிவாரணம் வழங்கவே விலை குறைக்கப்படுகிறது— இப்படி நிதி அமைச்சர் திரு. விஸ்வநாத் பிரதாப்சிங் சொன்னர்.

### போலந்தில் நாணய மதிப்பு இறக்கம்

ஹைதராபாத், பெப் 8

போலந்து அரசு, 7 ஆவது தடவையாக நாணயத்தை மதிப்பு இறக்கியது. 1982க்குப் பின்னர் நடந்த 7 ஆவது மதிப்பிறக்கம் இது.

போலந்தின் உற்பத்திப் பொருள்களுக்கு வெளிநாட்டுச் சந்தையில் நல்ல கிராக்கியைப் பெற்றுக் கொடுப்பதற்காகச் செய்யப்பட்டது.

### எம். ஜி. ஆரின் உத்தரவை ஜெயலலிதா மன்றங்கள் மீறுகின்றன

சென்னை, பெப். 8

முதலமைச்சர் திரு. எம்.ஜி. இராமச்சந்திரனின் உத்தரவை ஜெயலலிதா மன்றங்கள் மீறுகின்றன.

ஜெயலலிதா பேரவை, ஜெயலலிதா நற்பணி மன்றம் ஆகியவை கலைக்கப்பட வேண்டும். கலைக்கப்படா விட்டால் மன்ற உறுப்பினர்கள் மீது அதிமுக ஒழுங்கு நடவடிக்கை எடுக்கும் என்று முதலமைச்சர் உத்தரவிட்டு இருந்தார்.

இந்த உத்தரவையே ஜெயலலிதா மன்றங்கள் மீறுகின்றன.

ஜெயலலிதா மன்றங்களில் உறுப்பினர்களாக இருப்பவர்கள் அதிமுக உறுப்பினர்கள் அல்லர். ஆகவே அவர்கள் மீது கட்சி ஒழுங்கு நடவடிக்கை எடுக்கமுடியாது.

ஜெயலலிதா மன்றங்கள் அரசியல் சார்பானவையும் அல்ல. ஆகவே அவை மீது அதிமுக கட்டுப்பாடு விதிக்க முடியாது.

இப்படி அதிமுக எம். எல். ஏயும் ஜெயலலிதாவின் நெருங்கிய சகாவுமான திரு. பி. கண்ணன் தெரிவித்தார்.

### பெர்லின் பாலத்தில் குழுமி உள்ள பத்திரிகையாளர்கள்

மேற்கு பெர்லின், பெப் 8

கிழக்கு- மேற்கு ஜெர்மனியைப் பிரிக்கும் பெர்லின் பாலத்தில் ஏராளமான பத்திரிகையாளர்கள் டி. வி. படப் பிடிப்பாளர்கள் குழுமி உள்ளனர்.

உளவாளிகளின் பரிமாற்ற நிகழ்ச்சி பற்றி செய்தி சேகரிக்கவும் படம் பிடிக்கவுமே இந்த ஏற்பாடு.

அடுத்த வாரம் கிழக்கு ஜெர்மனியும் மேற்கு ஜெர்மனியும் தாங்கள் பிடித்துவைத்துள்ள உளவாளிகளை பெர்லின் பாலத்தில் வைத்து பரிமாற்றஞ் செய்ய உள்ளன.

## மாநிலம் - மாவட்டம் - உள்ளூர்

# அனுராதபுரத்துக்கு வடக்கே பிரபாகரன்தான் ஜனதிபதி

### அனுரா கூறுகிருர்

கொழும்பு, பெப். 9

அனுராதபுரத்துக்கு வடக்கே பிரபாகரன் தான் ஜனதிபதியாக இருக்கின்ருராம்.

இப்படி எதிர்க்கட்சித் தலைவர் அநுரா பண்டாரநாயக்கா கூறியிருக்கிருர்.

கடந்த புதன் மாலை கிரிலப்பனையில் சுதந்திரக் கட்சி கூட்டம் ஒன்று நடந்தது.

அக் கூட்டத்தில் பேசுகையில் தான் திரு. அனுரா பண்டாரநாயக்கா மேற்கண்ட சந்தேகத்தை எழுப்பினர்.

அவர் மேலும் சொன்னதாவது:

மலைநாட்டில் இன்று பத்தாயிரத்துக்கு மேற்பட்ட சிங்கள மக்கள் அகதிகளாக உள்ளனர்.

மதவாச்சியில் இன்று பத்தாயிரத்துக்குட்பட்ட சிங்கள மக்கள் தான் வாழ்கின்றனர்.

யாழ்ப்பாணத்தில் ஒரு சிங்கள மகன் கூட இல்லை.

தமிழ் தீவிரவாதிகளும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸும் சேர்ந்து தான் மலைநாட்டில் இன்று குழப்பத்தில் ஈடுபட்டு உள்ளனர்.

இலங்கை அரசின் போக்கை பற்றி இந்தியா நன்கு புரிந்து கொண்டு விட்டது. அதனல் திரு. பண்டாரியின் விஜயம் இறுதியில் ரத்துச் செய்யப்பட்டது.

—இப்படி திரு. அனுரா பண்டாரநாயக்கா சொன்னர்.

### மக்கள் முகம்

#### நிர்வாகிகள்

நாகர்கோயில், பெப். 9

புலோலி மேற்கு விவசாயிகள் சங்கம் அண்மையில் நாவலர் சனசமூக நிலைய மண்டபத்தில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது, இப்பகுதியில் அடிக்கடி ஏற்படும் விவசாயிகளின் பிரச்சினைகளைப் பற்றி ஆராயும் நோக்கமாக இச்சங்கம் அமைக்கப்பட்டது.

நிர்வாகிகளின் விபரம் பின்வருமாறு.

தலைவர் திரு. கு. வேலாயுதம், துணைத் தலைவர் திரு. ப. கிருஷ்ண பிள்ளை செயலாளர் திரு. க தங்கராசா பொருளாளர் திரு. தி. திருநாவுக்கரசு செயற்குழு உறுப்பினர்கள் திரு. பொ. ஸ்ரீஸ்கந்தராசா திரு. மா. கந்தசாமி திரு. ஆ. வேலாயுதம் திரு. பொ. திருச்செல்வம் திரு. க. ஸ்ரீஸ்கந்தராசா.

### பல் வைத்தியநிபுணர், தாதிகள் சம்பள உயர்வு போராட்டம்!

கொழும்பு,பெப்.7

அரசாங்க பல்வைத்திய நிபுணர்களும், தாதிகளும் இடைக்கால சம்பள உயர்வு கோரி போராடப் போகிருர்கள்.

இதற்கான காலக்கெடு குறித்து அரசுக்கு அவர்கள் அறிவித்தல் கொடுத்து விட்டார்கள்.

"பெப்ரவரி 17க்கு முன்னர் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டும்; இல்லையேல் பெப்ரவரி 18 இல்இருந்து தொழிற்சங்க நடவடிக்கையில் இறங்குவோம்" — இப்படி பல் வைத்திய நிபுணர்கள் காலக்கெடு கொடுத்துள்ளனர்.

டாக்டர்களுக்கு இடைக்கால சம்பள உயர்வாக மாதம் 1,000 ரூபா கொடுக்க முன் வந்தது மகிழ்ச்சியைத் தருகிறது எங்களுக்கு அந்த அளவு சம்பள உயர்வு தேவை இல்லை; மாதம் 5,00 ரூபா தந்தாலே போதும்—இப்படி பொது சேவை ஐக்கிய தாதிகள் சங்கம் அரசுக்கு கூறியுள்ளது.

### லைசென்ஸ் நீடிப்பு புதன்கிழமை தான் சுற்று நிருபம் வந்தது

யாழ்ப்பாணம், பெப்.9

மோட்டார் வாகன லைசென்ஸ் பெறும் திகதி நீடிக்கப்பட்டதான சுற்று நிருபம் கடந்த புதன் கிழமை தான் யாழ் செயலகத்துக்கு வந்து சேர்ந்தது.

இச்சுற்று நிருபத்தின் படி, 1986க்கான மோட்டார் வாகன லைசென்ஸ்களைத் தண்டப்பணம் இன்றி பெப்ரவரி 28 வரை பெற்றுக் கொள்ளலாம்.

அதுவும் 1985 ஆம் ஆண்டுக்கான லைசென்ஸைக் காட்டாமலேயே பெற்றுக் கொள்ள முடியும்.

பெப்ரவரிக்குப் பின்னர் 1986க்கான லைசென்ஸ் பெற வேண்டுமாஞல் தண்டப்பணம் செலுத்த வேண்டும்; 1985க் கான [illegible] பிக்க வேண்டும்.

[illegible]

### போராளிகளுடன் மலையகத்தமிழருக்கு தொடர்பில்லை -- தொண்டா

கொழும்பு. பெப். 9

மலையகத் தமிழ் மக்களுக்கு தமிழ்ப் போராளிகளுடன் தொடர்பு எதுவும் இடையாது.

அமைச்சர் திரு. எஸ். தொண்டமான் இப்படி அழுத்தம் திருத்தமாகக் கூறினர்.

மலையகத்திற்கு கடந்த வியாழன் மீண்டும் சென்று திரும்பிய பின்னர் அமைச்சர் தொண்டமான் இத்தகவலை வெளியிட்டார்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தற்சமயம் நிலவும் குழப்பநிலை போன்ற ஒன்றை மலையகத்திலும் தோற்றுவிக்க சில தீயசக்திகள் முயற்சி செய்கின்றன என்றும் அமைச்சர் தொண்டமான் குறிப்பிட்டார்.

### தொப்பி பிரச்சினை

கொழும்பு, பெப். 9

தொப்பியுடன் மாணவ தாதிகள் சுதந்திரதின அணிவகுப்பில் கலந்து கொண்டதால், அரசாங்க ஆஸ்பத்திரிகளில் தொப்பி இன்றி தாதிகள் கடமை புரிந்தனர்.

தாதிகள் வெளியே தொப்பி அணியக் கூடாது என்பது சுகாதார அமைச்சின் நிபந்தனை.

அப்படி இருக்கையில், சுதந்திரதின அணிவகுப்பில் எப்படி மாணவ தாதிகள் தொப்பிகளுடன் செல்ல முடியும்? இப்படி தாதிகள் சங்கம் கேட்டுள்ளது.

சுதந்திர தின அணிவகுப்பு, அரசின் தேசிய நிகழ்ச்சி. ஆகவே அமைச்சின் நிபந்தனை அதைக்கட்டுப்படுத்தாது — இப்படி சுகாதார அமைச்சு கூறியுள்ளது. 'தொப்பி' பிரச்சினை எங்கு போய் நிற்குமோ?

### சிங்களவரும் தமிழரும் வந்தேறு குடிகளே என்கிருர் அமைச்சர்

கொழும்பு, பெப் 9

சிங்களவரும் தமிழரும் வந்தேறு குடிகளே. சிங்களவர் இந்தியாவின் வடக்குப் பகுதியில் இருந்து வந்து குடியேறினர். தமிழர் தென் இந்தியாவில் இருந்து வந்து குடியேறினர்.

இந்த நாட்டை தாய் நாடு என்று கோர சிங்களவருக்கும் தமிழருக்கும் சமமான உரிமை உண்டு.

உணவு, விவசாய அமைச்சர் திரு. காமினி ஜயசூரியா மேற்கண்டவாறு சொன்னர்.

மீகொட என்னும் இடத்தில் கைப்பணிக் கண்காட்சி ஒன்றைத் திறந்து வைத்துப் பேசுகையில் அமைச்சர் மேற்கண்ட தகவல்களை வெளியிட்டார்.

[illegible] உதயனில் வெளியாகி விட் [illegible]

### ஸ்ரீ- ல- சு- க- முக்கிய கூட்டம்

கொழும்பு, பெப்.9

சுதந்திரக் கட்சியின் எதிர்காலக் கொள்கை வகுக்கும் முக்கிய கூட்டம் பெப்ரவரி 22 ஆம் திகதி நடைபெறும்.

அன்றைய தினம் முக்கிய முடிவுகள் எடுக்கப்படும் என்று தெரிகிறது.

இது சம்பந்தமான பூர்வாங்க ஆலோசனைக் கூட்டம் ஒன்று பெப்ரவரி 16 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

### நீத்தார் புகழாரம்

## சேவைக்கோர் அணிகலன் செல்லையா கணேஷ்



அமரர் செல்லையா கணேஷ். (யாழ்மாவட்ட மேலதிக சுங்க இறங்குதுறை அளவையாளர் - உதவி சுங்க சேகரிப்பாளர்)

இன்னும் பல்லாண்டு வாழவேண்டியவர் இன்று நம்மத்தியில் இல்லை.

வாழ்ந்து நமக்கு வழி காட்ட வேண்டிய பெருந்தகை அவர்.

இனத்தை வழி நடத்தும் பொறுப்பை ஏற்றுக் கொள்ளக்கூடிய இளம் பெருமகன் அவர்.

'ஏ. ஆர்., களும் 'எப். ஆர்., களையும் சொல்லுக்குச் சொல் அமுல் நடத்துவது தான் நிர்வாகம் அல்ல; தேடி வரும் பொதுமகனின் தேவையைப் பூர்த்தி செய்ய அவற்றினுள்ளே என்ன இருக்கின்றது? இதைக் கண்டுபிடித்து உதவுவதில்தான் அரச அதிகாரியின் நிர்வாகத் திறமை தங்கி உள்ளது-

இந்த எண்ணத்துடன் வாழ்ந்த அந்த இளம் நிர்வாகி, நம்மத்தியில் இன்று இல்லை.

கஷ்டங்களுக்கு நிவர்த்தி காண அரச அலுவலகங்களுக்குச் செல்வோர்களுக்கு அவரைப் போன்ற நிர்வாகிகள் தான் தேவை.

அதற்கு இலக்கணமாய் இலட்சிய வாதியாக வாழ்ந்து காட்டியவர் அன்னர்.

"கஷ்டமா? அதற்கும் வழிகாணுவோம் - இப்படி உடைந்த உள்ளத்துடன் வருபவர்களை உறுதியான உள்ளத்துடன் திருப்பி அனுப்பிவைக்கும் பண்பு, அது அவரிடம்தான் உண்டு.

இரக்க சிந்தை கொண்டவர். இன்முகம் காட்டி வரவேற்பவர்.

தமிழன் உயர்ச்சிக்கு தேவையானவர்.

நாம் கொடுத்து வைத்தது அவ்வளவுதான்.

அன்னர் ஆத்மா சாந்தி அடைவதாக!

—குரு

### பருத்தித்துறையில் காயமடைந்த மற்றும் சிலர்

பருத்தித்துறை,பெப்.9

பருத்தித்துறைப் பகுதியில் புதன்கிழமை மாலை நடைபெற்ற பீரங்கி, மோட்டோஷெல் தாக்குதல்களால் காயமடைந்து மந்திகை அரசினர் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டோரில் மற்றும் சிலரின் விவரம்:-

வேலுப்பிள்ளை ஈஸ்வரி 50வயது தம்பசிட்டி.

கா மகேஸ்வரன் வயது 13. அல்வாய் தெற்கு.

கே யோகராசா வயது 11. ஓடக்கரை.

இ.கனகம்மா வயது50 ஓடக்கரை.

இ. ராதிகா வயது 19 ஓடக்கரை.

வி. அசோக்குமாரி வயது26.

### சிறில்மத்தியு மீது நடவடிக்கை

கொழும்பு, பெப். 9

மலையகத் தமிழர் குடியுரிமைச் சட்ட மூலத்தை எதிர்த்து வாக்களித்த முன்னுள் அமைச்சர் சிறில் மத்தியூ மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க ஐக்கிய தேசியக் கட்சித் தலைமைப் பீடம் தயாராகிறது.

கட்சியின் செயற்குழுக் கூட்டம் கோட்டேயில் வார இறுதியில் நடைபெறும் போது இந்த விவகாரம் பரிசீலனை செய்யப்பட உள்ளது. இக் கூட்டத்துக்கு ஜனதிபதி ஜெயவர்த்தன தலைமை வகிப்பார்.

### 407 கடிகாரங்களுடன் சிங்கப்பூர் வாசி

கொழும்பு, பெப்-9

407 கைக்கடிகாரங்களுடன் கட்டுநாயக்கா விமானநிலையத்தில் வந்து இறங்கிய சிங்கப்பூர் வாசி ஒருவர் சுங்க அதிகாரிகளிடம் வசமாக மாட்டிக் கொண்டார்,

குற்றத்தை ஒப்புக் கொண்ட அவருக்கு சுங்கத் திணைக்களம் 50,000 ரூபா அபராதம்விதித்தது பறிமுதல் செய்யப்பட்டகைக் கடிகாரங்களின் பெறுமதி 57,000 ரூபா ஆகும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### உதய சங்கற்பம்

சாத்தான் வெறுப்போடு உங்களிடம் வந்தால் தேவன் உங்களிடம் அன்பாய் இருக்கின்றார் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.

-வேதவாக்கு

உதயன்
உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை
இல: 15, 2வது ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்,
தொலைபேசி: 24305 22073
09-02-86 த. பெ. 23

## உள் ஒன்று வைத்து புறம் ஒன்று பேசுவார்....

தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி நடத்திய பத்திரிகையாளர் மாநாடு எல்லோரது கவனத்தையும் ஈர்த்திருக்கிறது: பத்திரிகையாளர் மாநாட்டில் அவர் தெரிவித்த கருத்துக்களை அறிவதில் மக்கள் ஆவலாய் இருப்பதில் வியப்பில்லை.

இந்த நாட்டின் முதலாம் இலக்க அரசியல் தலைவர் ஜனாதிபதி. அவருக்கு அடுத்த இடத்தில் வைத்துக் கணிக்கும் அளவுக்கு உயர்ந்திருப்பவர் திரு. லலித் தான். தேசிய பாதுகாப்பு, பிரச்சினைக்குரிய விடயமாக மாறி விட்டதால் அவருக்கு அப்படி ஓர் அதிஷ்டம்.

அந்த அதிர்ஷ்டத்தை வைத்துக்கொண்டு அவர் வாயில் வந்ததை எல்லாம் உளறுகிறார். நேரத்துக்கு ஒன்றைச் சொல்வது வேறு. ஒரு நேரத்திலேயே முன்னுக்குப் பின் முரணைச் சொல்லுவது பாரதூரமானது.

வெள்ளிக்கிழமைப் பத்திரிகையாளர் மாநாட்டில் உள்நாட்டு, வெளிநாட்டுப் பத்திரிகையாளர்கள் பெரும் எண்ணிக்கையில் கலந்து கொண்டனர். அரசாங்க ஊதுகுழல்களில் ஏகப்பட்ட விளம்பரம்.

அந்த மாநாட்டில் அவர் கூறிய முக்கிய அம்சங்களை நீங்களே ஒரே பார்வையில் படித்துப்பாருங்கள்:

1. தமிழ்ப் போராளிகள் தங்களைப் பலப்படுத்திக் கொள்ள இந்திய அரசாங்கத்திடம் இராணுவ உதவி கோரியுள்ளனர்.

2. இலங்கை அரசு ஐந்து தடவைகள் யோசனைகளைச் சமர்ப்பித்தது. தீவிரவாதிகள் ஒரு முறை தானும் யோசனைகளை முன் வைக்கவில்லை.

3. தமிழ்ப் போராளிகள் குழுக்களுடன் உத்தியோக பூர்வமாகவோ அல்லது உத்தியோகப்பற்றற்ற முறையிலோ பேச்சு வார்த்தை நடத்த அரசாங்கம் தயார். இந்திய அரசாங்கம் தான் மீண்டும் பேச்சு வார்த்தைக்கு உதவவேண்டும்.

4. இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்குத் தான் அரசாங்கம் விரும்புகிறது. சமாதான முயற்சி தோல்வி அடைவதை அரசு விரும்பவில்லை.

5. இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு. ஆனால்பயங்கரவாதத்தை ஒழிக்க இராணுவத் தீர்வு தான் வேண்டும்.

6. வடக்கு,கிழக்கு இணைப்புக்கு நாம் சம்மதியோம். ஒற்றை ஆட்சியின் கீழ் அதிகாரப் பரவலாக்கம் செய்வதை ஆலோசிக்கலாம்.

7. பிரச்சினைக்குத் தீர்வு காண நியாயமான கோரிக்கைகள் முன்வைக்கப்பட வேண்டும். நியாயமற்றகோரிக்கைகளைக் கேட்கக் கூடாது.

இந்த ஏழு கூற்றுக்களையும் ஒன்றை மற்ற ஒன்றோடு ஒப்பிட்டுப் பார்ப்போமா?

முதலாவதில், போராளிகள் இந்தியாவிடம் இராணுவம் கேட்டதாகச் சொல்கிறார்.

அப்படிச் சொல்பவர் என்ன நெஞ்சத் துணிவோடு தமிழ் போராளிகளுடன் தனது அரசு பேச்சுவார்த்தை நடத்த (மூன்றாவதில்) இந்தியாவின் உதவியைக் கேட்க முடியும்!

போராளிகள் யோசனைகளைச் சமர்ப்பிக்கவில்லை என்று இரண்டாவது கூற்றில் சொல்கிறாரே! திம்புப் பேச்சு நடந்ததை மறந்து விட்டாரா அல்லது முழுப்பூசினிக் காயைச் சோற்றில் மறைக்கப் பார்க்கிறாரா?

மூன்றாவதில், மீண்டும் பேச்சுவார்த்தை நடத்த இந்திய அரசாங்கம் உதவ வேண்டும் என்று சொல்கிறார். ஏற்கனவே தொடக்கிய பேச்சுவார்த்தையை முறித்து மீண்டும் எப்படிப் பேச்சுவார்த்தை நடதத முடியும்?

நான்கையும் ஐந்தையும் படியுங்கள். எத்துணை முரண்பாடு! அவர்சொல்லும் பயங்கர வாதம் எதனால் பிறந்தது? மரத்தின் ஆணி வேரை விட்டு விட்டு மேற்கிளையை வெட்டினால் மரம் பட்டுவிடும் என்று நினைக்கிறாரோ!

ஆறாவது கூற்றையும் ஏழாவதையும் ஒப்பிடுகள். வடக்கு கிழக்கு இணைப்புக்குச் சம்மதியாமலும், அதிகாரப் பரவலை ஆலோசித்தும் அவர் பிரச்சினைக்கு எந்த விதமான தீர்வை வகுக்கப்போகிறார்?

ஏழாவது கூற்று ஏனனத்துக்கு உரியது! நியாயமான கோரிக்கைகளை முன்வைக்க வேண்டுமாம். தமிழ் மக்களுக்கு நியாயமானதாகப் பட்டது அவருக்கு நியாயமானதாகத் தெரியவில்லை. அப்படியானால் தமிழர் மாவட்டசபையைக் கேட்கவேண்டும். அவர் அதைத்தரவேண்டும். அதுதான் அவருக்கும், அரசுக்கும் நியாயமான கோரிக்கையாக இருக்கும். அப்படித்தானே!

இந்த விதண்டா வாதங்களும் முரண்பாடுகளும் எதை உணர்த்துகின்றன?

தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு என்று அமைச்சர் லலித்திடமோ, ஜனாதிபதியிடமோ, அரசாங்கத்திடமோ எந்தவித ஆக்கபூர்வமான திட்டமும் இல்லை! இல்லை!

பேச்சுவார்த்தை என்று காலத்தைக் கடத்திக்கொண்டும், பயங்கரவாதத்தை ஒழிப்பதாகக் கூறிக்கொண்டும் தமிழர்களை அழித்து விடுவது தான் அவர்களது ஒரே திட்டம்.

அந்தத் திட்டம் தான் அவர்களது உள்ளத்தில் எழுந்த திட்டம். அதனை மறைத்து வெளியில் பிறிதொன்றைச் சொல்ல முயலும்போது முரண்பாடுகளும் விதண்டா வாதங்களும் பித்தலாட்டங்களும் அவர்களை அறியாமலே கக்கப்படுகின்றன.

இதனைத் தான்:

உள் ஒன்று வைத்துப் புறமொன்று பேசுவார் உறவு கலவாமை வேண்டும்.

—என்று இராமலிங்க அடிகளார் சொன்னார்.

அந்த அடியவர் அருள் வாக்குத்தான் தமிழருக்கு வழிகாட்டியாக இருக்க வேண்டும்.

# பாவங்களுக்காக மனம் வருந்தி தேவனிடம் அறிக்கையிடுங்கள்

## அவர் புதிய ஜீவனை உங்களுக்கு அளிப்பார்



சிநேகிதனே, உமது வாழ்க்கை பிரச்சினைகளால் நிறைந்திருக்கிறதா? உமது ஆத்மாவில் இளைப்பாறுதலையும் சமாதானத்தையும் பெற விரும்புகிறீரா? நித்தியத்தை எங்கு கழிக்கப் போகிறீர் என்பதைப் பற்றிச் சிந்தித்துப் பார்த்திருக்கிறீரா? தேவனைச் சந்திக்க நீர் ஆயத்தமா? இவ்வுலகில் எல்லா இக்கட்டான நிலைக்கும் பாவமே மூலகாரணமாகும்.

''துன் மார்க்கனுக்குச் சமாதானம் இல்லையென்று என் தேவன் சொல்லுகிறார்'' என்று பரிசுத்த வேதாகமம் கூறுகிறது. 'எல்லோரும் பாவம் செய்து தேவ மகிமையற்றவர்களானார்கள்,

''எப்படியெனில் மனிதருடைய இதயத்திற்குள்ளிருந்து பொல்லாத சிந்தனைகள் புறப்பட்டு துன்மார்க்கத்தில் வழி நடத்தி களவு, கொலை, விபசாரம், காமவிகாரம் ஆகியவற்றையும் எல்லா விதத் தீமைகள், வஞ்சகம், கபடு, பொறாமை, தூஷணம், பெருமை, மதிகேடு ஆகியவற்றையும் செய்ய அவனைத்தூண்டும்' என்று இயேசுக் கிறிஸ்து கூறினார்.

மனிதனின் சுபாவம் இதிலிருந்து தெளிவாயிருக்கிறது. அது ஒழுக்கக் கேடானதும் அசுத்தமானதும் முறையற்றதுமான செய்கைகளாக வெளிப்படுகிறது.

விக்கிரகங்களை வணங்குவதிலும் பில்லிசூனியம் செய்வதிலும் ஈடுபடுகிறது.

மனிதர்கள் ஒருவருக்கொருவர் பகைவராகிறார்கள்;

தங்களுக்குள் சண்டை செய்து, பொறாமை, கோபம், பேராசை ஆகியவற்றால் நிறைகிறார்கள்.

தங்களுக்குள் கட்சிகளாகப் பிரிந்து எரிச்சலுள்ளவர்களாகி, மதுபான வெறிகொண்டு களியாட்டுகள் முதலியவற்றைச் செய்கிறார்கள்.

இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் தேவனுடைய இராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை.

''பாவம் செய்கிறவன் பிசாசினால் உண்டாயிருக்கிறான்– அவன் பாவத்திற்கு அடிமையாக இருக்கிறான்'' இன்று நாம் இருக்கிறதான பயங்கர நிலையிலிருந்து விடுதலைபெற வழியில்லையா? உண்டு. இந்த உலகிலேயே பரிசுத்தமாக வாழ வழியுண்டு.

கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்து உங்களை விடுதலை செய்வாரேயானால் உண்மையாகவே நீங்கள் விடுதலையாவீர்கள். ''ஏனெனில் தேவனால் பிறந்த எவனும் பாவம் செய்யான்''

மனிதன் தன் சுயமுயற்சியால் பாவத்திலிருந்து விடுதலை பெறமுடியாது. கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து மாத்திரமே இரட்சகர். அவரே வழியும் சத்தியமும் ஜீவனுமாக இருக்கிறார். ''சத்தியத்தை அறிவீர்கள். சத்தியம் உங்களை விடுதலையாக்கும்''

மெய்யான மனஸ்தாபத்தோடு உங்கள் பாவங்களை அறிக்கையிடுங்கள். கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து உங்களை மன்னிப்பார். அவர் உங்களுடைய பாவங்களைச் சிலுவையிலே சுமந்து, எல்லாப் பாவங்களையும் கழுவும்படியாகத் தமது இரதத்தைச் சிந்தினார்.

பாவஞ் செய்யாதபடிக்கு உங்களைக் காப்பார் என்று அவரில் நம்பிக்கை வைக்கும் பொழுது நீங்கள் தேவனுடைய பிள்ளையாகிறீர்கள்.

இதற்கு அடுத்தபடி தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து முழுக்கு ஞானஸ்நானம் பெற்றுக்கொள்வதாகும். ஞானஸ்நானத்தில் நாம் தேவனுடைய பூரண சித்தத்தையும் நிறைவேற்றத் தீர்மானிக்கும் போது நமது முற்பிதாக்களிடமிருந்து நாம் சுவீகரித்துக்கொண்ட கீழ்ப்படியாமையின் சுபாவத்திற்கு நாம் மரிக்கிறோம்.

நாம் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படிக்கு அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனே கூட அடக்கம் பண்ணப் படுகிறோம். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்.

கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்து எமது ஆத்மாவின் இரட்சகரும் அதனைப் பரிசுத்தமாக்குகிறவரும் மாத்திரமல்ல. எமது சரீரத்தின் பரிகாரியாகவுமிருக்கிறார்.

அவர் தாமே சிலுவையில் நம்முடைய பாவங்களையும் நோய்களையும் சுமந்தபடியால் அவருடைய தழும்புகளால் குணமாகிறோம். உங்கள் சரீரங்களை அவரிடம் ஒப்படைத்து உங்கள் சுகத்திற்காக அவரில் மாத்திரம் நம்பிக்கை வையுங்கள்.

உலகிலிருந்து உன்னதமான நிலைக்கு உயர்த்தப்பட்டு வெற்றிகரமான மேலோங்கிய வாழ்க்கை வாழ்வதற்கு உன்னதத்திலிருந்து வரும் பெலனால் நாம் தரிப்பிக்கப்படவேண்டும். அதுவே பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம். அவரே நித்தியமாய் நமக்குள் வாசஞ்செய்யும் தேற்றரவாளனுவர். ''அவர்களெல்லாம் பரிசுத்தாவியினாலே நிரப்பப்பட்டு ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளிய வரத்தின்படி வெவ்வேறு பாஷைகளில் பேசத் தொடங்கினார்கள்.

தேவனுடைய பிள்ளைகள் கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தால் இணைக்கப்படுகிறார்கள்.

கிறிஸ்துவின் சாயலுக்கொப்பாக நம்மை மறுரூபமாக்கி வெகு சீக்கிரமான கிறிஸ்துவின் வருகைக்கு எம்மை ஆயத்தமாக்குவதற்காகவே பரிசுத்த ஆவியானவர் தரப்படுகிறார்.

சரீரத்திலும் ஆவியிலும் ஆத்துமாவிலும் முற்றிலுமாகப் பரிசுத்தமாக்கப்பட்டு கிறிஸ்துவில் பரிபூரணமாக்கப்பட்டோரான கிறிஸ்துவின் மணவாட்டியை எடுத்துக் கொள்ளும்படியாகவே அவர் வருகிறார். ஆயத்தமில்லாதோர் கொடுந் துன்பத்தினூடாகச் செல்வர்.

இந்த மகிமையான இரட்சிப்பு உமக்கே உரியது. இயேசு கிறிஸ்துவை உமது இரட்சகராகவும் கர்த்தராகவும் விசுவாசித்து நிரம்பிவழியும் இந்நித்திய ஜீவனை ஏற்றுக் கொள்ளுங்கள்.

அவரைத் தள்ளிவிடுதல் நித்திய அழிவையே தரும். ''நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும் மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவில்லை.

வருத்தப்பட்டுப் பாரம் சுமக்கிறவர்களே. நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்'' என்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்து கூறுகிறார்.

இன்றே இரட்சிப்பின் நாள். நாளை எமதல்ல. இப்பொழுதே இயேசுவுக்கென்று தீர்மானியுங்கள். உங்கள் பாவங்கட்காக மனஸ்தாபப்பட்டு தேவனிடம் அவற்றை அறிக்கையிட்டு உங்களுக்குப் புதிய ஜீவனைத் தரும்படி அவரிடம் கேளுங்கள்.

அவர் அதை உங்களுக்கு அளிப்பார் என்று விசுவாசியுங்கள். அப்பொழுது அதைப் பெற்றுக்கொள்வீர்கள்.

நன்றி

இலங்கை பெந்தகொஸ்தே சபை.



### பொய்யாமொழி

குறள்:

அன்பிற்கும் உண்டோ அடைக்குந்
தாழ் ஆர்வலர்
புன்கண்நீர் பூசல் தரும்.

பொருள்:

அன்புக்கும் அடைத்து வைக்கும் தாழ் உண்டோ? அன்புடையவரின் சிறு கண்ணீரே (உள்ளே இருக்கும் அன்பைப்) பலரும் அறிய வெளிப்படுத்தி விடும்.

# விசர்நாய்க்கடி மரணங்கள் தடுக்க வழிமுறைகள் என்ன?

**டாக்டர். எஸ். சிறிகரன்**
(யாழ். அரசினர் ஆஸ்பத்திரி)

யாழ்ப்பாணப் பிராந்தியத்தில் கடைசி 4 மாதங்களாக நீர் வெறுப்பு நோய் (விசர் நாய்க்கடி) மக்களிடையே கூடுதலாக இருக்கக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. கடைசி நான்கு மாதங்களுக்குள் இந்நோயினால் பாதிக்கப்பட்ட 7 பேர் யாழ் அரசாங்க வைத்திய சாலைக்கு அனுமதிக்கப்பட்டு இறந்து விட்டார்கள். இத்தகவல் மேலும் யாழ்ப்பாணத்தில் நீர் வெறுப்பு நோய் கூடுதலாக உண்டாகும் அபாயம் உள்ளது என்பதை எடுத்துக்காட்டுகின்றது.

இதனால் நீர் வெறுப்பு நோய் என்றால் என்ன? என்பதைப் பொதுமக்களாகிய நாம் நன்கு அறிந்து கொள்ள வேண்டிய நிலை தற்பொழுது ஏற்பட்டுள்ளது. ஏனெனில் இது யாருக்கும் சம்பவிக்கலாம்.

நீர் வெறுப்பு நோய் திரும்ப தலையெடுப்பதற்குக் காரணம் நாம் இது சம்பந்தமாக தடுப்பு முறைகளை சரியாகத் தெரிந்து கொள்ளாமையே ஆகும். மேலும் நீர் வெறுப்புநோய் மற்றையநோய்களை விடக் கொடியது.ஏனெனில்இந் நோய் ஒருவரைப் பாதித்தால் நிச்சயம் அவரை இறக்கச்செய்து விடும்.

நீர் வெறுப்பு நோய் உண்டாகினால் அதற்கு மருந்து இல்லை. அதிலிருந்து எம்மைக் காக்க ஒரேஒரு வழி நம்மிடம் அந்நோய் வராது தடுப்பது மாத்திரமே.

நீர் வெறுப்பு நோய் எனப்படுவது(RHABDO-VIRUS) ராப்டோவைரசு என்னும் கிருமியினால் உண்டாகிறது. இக்கிருமி மனிதனை மாத்திரமல்ல நாய், பூனை போன்ற விலங்குகளையும் பாதித்து அவற்றில் நோயை உண்டாக்கும். இக்கிருமியானது. இக்கிருமியாற் பாதிக்கப்பட்டுள்ள நாய்களின் உமிழ்நீர் அல்லது எச்சியிற் காணப்படுகின்றது. இக்கிருமியினாற் பாதிக்கப்பட்ட நாய்கள் மனிதனைக் கடிப்பதன் மூலம் அல்லது நகங்களால் விராண்டியதன் மூலம் அல்லது ஏற்கனவே உடலிலுள்ள புண்ணை நக்குவதன் மூலம் கிருமியானது நாயிலிருந்து மனிதனின் இரத்தத்தை அடைகின்றது. கிருமியானது மனித இரத்தத்தை அடைந்து அல்லது நோயுள்ள நாய் கடித்து 10 நாட்களிலிருந்து 6மாதங்களினுள் மனிதனின் மூளையை அடைந்து அங்குள்ள நரம்புகளைச் சிதைப்பதனால் மனிதனில் நீர் வெறுப்புநோய் தென்படுகின்றது.

மனிதனில் நீர்வெறுப்பு நோய் தோன்றியதன் அறிகுறிகளாவன:-

ஆரம்பத்தில் காய்ச்சல் உண்டாகும். அதன் பின்னர் சில மணித்தியாலங்களின் பின் நோயாளி நீரைக்குடிக்க முயற்சிக்கும் பொழுது தொண்டையிலுள்ள சதை இறுகுவதால் குடிக்க முடியாது கஷ்டப்படுவார். தொடர்ந்தும் நோயாளிக்கு தண்ணீர்த்தாகம் ஏற்படுவதால் நீரைக் குடிக்க விருப்பப்படுவார். ஆனால் நீரை அருந்த முற்படும் பொழுது தொண்டை இறுகுவதை அவதானித்ததனால், அதனாலுண்டான பயத்தால் நீரை அருந்தமாட்டார். இந்நிலை தொடர்ந்து சில நாட்கள் நீடித்து பின்னர் மயக்க நிலையையடைந்து அதன் பின்னர் ஒரிரு தினங்களில் மரணம் சம்பவிக்கும். மேற்கூறப்பட்ட நோய்க்கிருமியானது நாயைப் பாதிப்பதால் நாயில் உண்டாகும் அறிகுறிகளை இனிப் பார்ப்போம்.

வழமையை விட வித்தியாசமாக எல்லா இடங்களிலும் நோக்கமில்லாது ஓடித்திரிதல்.

தனக்கு ஒன்றும் தீங்கு செய்யாது இருக்கும் பிராணிகளை அல்லது மனிதனை தானாக வந்து கடித்தல் அல்லது தாக்கல்.

வாயிற் கூடுதலான எச்சில் வடிதல்.

வழமைக்கு மாறான முறையிற் குரைத்தல்.

கண் கூடுதலாக சிவந்து இருத்தல்.

சாப்பிடாது இருத்தல்.

மேற்கூறிய விபரங்களையடுத்து அதன் அறிவையும் பயன்படுத்தி நாம் எவ்வாறு நீர்வெறுப்பு நோய் மனிதனில் உண்டாவதைத் தடுக்கலாம் எனப் பார்ப்போம்.

வளர்ப்போர் இல்லாது திரியும் நாய்களைக் கொன்று, அவற்றின் உடலை முற்றாக எரித்து சாம்பராக்க வேண்டும். கிருமியினாற் பாதிக்கப் பட்டதாக சந்தேகிக்கப் படும் நாய்கள் தாக்கி ஏதும் காயம் எமக்கு உண்டானால் ''என்ன செய்ய வேண்டும்?'' எனத் தெரிந்திருப்பது அவசியம்.

### முதலாவதாக முதலுதவி

காயத்திற்கு அல்லது நக்கப்பட்ட புண்ணிற்கு சவர்க்காரம் போட்டு நன்றாகத் தேய்த்துக் கழுவவும். இது [illegible] செய்யப்படவேண் [illegible] மேற்கூறியதைத் தொடர்ந்து செய்யவும். அதன் பின்னர் புண்ணிற்கு ஸ்பிரிட் (Surgical Spirit) அல்லது அயடீன் கலவை கொண்டு பூசிவிடவும்

மேற்கூறியதை அரசாங்க ஆஸ்பத்திரியிலும் செய்து கொள்ளலாம்.

### இரண்டாவதாக

அரசாங்க வைத்தியசாலைக்கு நோயாளியை எடுத்துச் சென்ற விவரத்தைக் கூறவும். தாக்கிய நாயில் விசர்நாய்க்கடிக் கிருமியினாற் தாக்கப்பட்ட அறிகுறிகள் காணப்பட்டிருப்பின் உடனே புண்ணிற்குள்ளும் புண்ணைச் சுற்றியும் தடுப்பூசி ஏற்றுவார்கள். இதன்பின்னர் தினமும் ஒருதடவைப்படி 14நாட்களுக்கு இன்னொரு வித தடுப்பூசி போட்டுக் கொள்ள வேண்டும்.

இதன் பின்னர் 10 நாட்கள், 20நாட்கள், 90 நாட்களின் பின் ஒவ்வொரு தடுப்பூசி போட்டால் நீர் வெறுப்பு நோய்க்கெதிரான சக்தி உடலிற் பேணப்பட உதவியாக இருக்கும்.

### மூன்றாவதாக

நோய் அறிகுறி காணப்படாத எந்த நாய் கடித்தாலும் அதனைக் கட்டி வைத்து 10 நாட்களுக்கு அவதானிக்க வேண்டும். இந்தப் பத்து நாட்களுக்குள் நாய் இறந்திருப்பின் உடனே அரசாங்க வைத்தியசாலைக்குச் சென்று மேற்கூறப்பட்ட தடுப்பூசிகளைப் போட்டுக் கொள்ள வேண்டும்.

மேற்கூறிய தடுப்பு முறைகளை நாம் ஒவ்வொருவரும் தெரிந்து வைத்து அதன்படி நடவடிக்கை எடுப்போமாயின் நீர்வெறுப்பு நோய் மனிதரில் உண்டாவதை நாம் முற்றாக தடுப்பதன் மூலம் அநாவசியமான உயிரிழப்புக்களைத் தடுக்கலாம்.

# பொதுசன தொடர்பு சாதனம் பொய் சொல்லும்

## அமெரிக்க பேராசிரியர் கூறுகிறார்

கொழும்பு, பெப்–9

ராஜாங்கத் திணைக்களத்தின் கீழ்உள்ள பொது சனத்தொடர்புச்சாதனங்கள் எப்பொழுதுமே பொய் தான் சொல்லும்.

நான் அவர்களுடன் பேசுவதே இல்லை.

நடப்பதைப் பற்றி நான் அறிய விரும்பினால் பத்திரிகையாளர்களுடன் தான் பேசுவேன்.

மறைந்த பிரபல அமெரிக்க செனட்டரான ஜேம்ஸ் புல்பிரைட்டும் இதைத்தான்கூறிவந்தார்

மேற் கண்டவாறு பேராசிரியர் வில்லியம் கிளிங்டன் ஒஸ்லோன் தெரிவித்தார்.

''வெளிநாட்டுக் கொள்கையை எப்படி வகுப்பது? அமெரிக்காவின் கொள்கை புத்திசாலித்தனமாக உள்ளதா?''இத்தலைப்பில் பேராசிரியர் ஒஸ்லோன் கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச ஆராய்ச்சி நிலையத்தில் பேசினார்.

பேராசிரியர் மேலும் சொன்னதாவது:

ஜனாதிபதி றேகன் வெளிநாட்டுக் கொள்கை பற்றி நல்லாக தெரிந்து வைத்து இருக்கவில்லை. நிக்ஸன், ஜோன் கென்னடி ஆகியோர் வெளிநாட்டுக் கொள்கை பற்றி நல்லாக அறிந்து இருந்தனர்.

பயங்கரவாதம் பற்றி அவர்களுக்கு கொள்கை எதுவும் இருக்கவில்லை.

பயங்கரவாதத்துக்கு எதிராக நாம் எடுக்கும் நடவடிக்கை அப்பிரச்சினையை மோசமாக்கி விடுகிறது.

இப்படி பேராசிரியர் ஒஸ்லோன் சொன்னார்

## 2 வாரச்சிறை

கொழும்பு, பெப். 9

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் திருநாவுக்கரசு கண்ணதாசன் என்ற இளைஞனுக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் இரண்டு வாரம் சாதாரண சிறைத் தண்டனை விதித்தது.

நீதிபதி திரு. கே. விக்னராஜா தீர்ப்பு வழங்கினார்.

'சுபு' என்ற தீவிரவாதியின் நடவடிக்கை தெரிந்திருந்தும் அது பற்றிய தகவல்களை பொலீஸாருக்குத் தெரிவிக்கத் தவறியதே அவர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டாகும்.

உதயனின் வார இதழ் சஞ்சீவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தபால் மூலம் ஆங்கிலக் கல்வி
மாணவர்கள், வேலை செய்வோர், வெளிநாடு செல்வோர் இல்லத்தரசிகள் அனைவருக்கும் ஏற்றது.
கட்டணம்: Rs. 250
இலவச விபரக்கொத்திற்கும், விண்ணப்பப் பத்திரத்திற்கும் தயவுசெய்து எழுதவும்
Cantabia Institute
(Shoor of Oxonia, Colombo)
21, MAIN STREET, JAFFNA. T'Phone: 2420[1].


# உதயன்

09. 02. 1986


G.C.F. (O.Level) Fnglish & NCE
புதிய பிரிவு ஆரம்பம்: 15 - 2 - 86
முழுக் கட்டணம்: ரு. 250/-
Lecturer: Mr. KANDIAH NAVARENDRAN
வகுப்புகள் பாதுகாப்பான இடத்தில் நடைபெறும்.
Cantabia Institute
(Shoot of Oxonia. Colombo.)
21, MAIN STREET, JAFFNA. T'Phone: 24201

## இன்றைய நிகழ்ச்சிகள்

### கைதடியில்

கைதடி, பெப். 9

தொலைக்காட்சி தொடர்பான செய்முறை வகுப்பு இன்று ஞாயிறு காலை 9-00 மணிக்கு கைதடி வெளிக்கள நிலையத்தில் நடைபெறும்.

சாவகச்சேரிவட்டாரக் கல்வி அதிகாரி ச. தங்கராசா தலைமை வகிப்பார்.

ரெலிக்கோணர் ஸ்தாபன பிரதம தொழில் நுட்பவியலாளர் ச. ஞானகுணனந்தன் தொலைக்காட்சியும் தொழிற்பாடும் என்னும் பொருள்பற்றி விளக்க உரை ஆற்றுவார்.

### சுன்னுகத்தில்

சுன்னுகம், பெப். 9

அகில இலங்கை திருவள்ளுவர் மகாசபையின் பரிசு வழங்கும் விழா இன்று நடைபெறுகிறது.

1986 ஆம் ஆண்டுக்கான புலமைப்பரிசில் பெற்ற ஏழை மாணவர்களே இன்றைய வைபவத்தில் பரிசு பெறுகின்றனர்.

சுன்னுகம் ஸ்ரேமன் கத்தோலிக்க அரசினர் பாடசாலையில் இன்று பிற்பகல் 3.00 மணிக்கு பரிசளிப்பு விழா நிகழ்ச்சிகள் தலைவர் செ. பா. ஜீவானந்தம். தலைமையில் நடைபெறுகின்றன.

### நல்லூரில்

யாழ்ப்பாணம், பெப். 9

நாவலர்சபையின் தலைவரும் முன்னுள் நீதியரசருமான திரு. வி சிவசுப்பிரமணியத்தின் அஞ்சலிக் கூட்டம் இன்று ஞாயிறு மாலை நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறும்.

யாழ் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் தலைமை வகிப்பார்.

### திருநெல்வேலியில்

நல்லூர், பெப். 9

நல்லூர் ஒய்வூதியர் நலன்புரிச் சங்கத்தின் 4 ஆம் ஆண்டுப் பொதுக் கூட்டமும் பரிசளிப்பு விழாவும் இன்று ஞாயிற்றுக்கிழமை திருநெல்வேலி முத்துத்தம்பி மகா வித்தியாலயத்தில் நடைபெறும்.

வைபவத்துக்கு திரு. ஏ. எம் இராஜேந்திரம் தலைமை வகிப்பார்.

திருமதி எஸ். சிவகுருநாதன் பரிசில்களை வழங்குவார்.

### விற்பனைக்கு

தரமான சுவையான ஒடியல், புழுக்கொடியல், ஒடியல் சீவல், ஒடியல் மா, புழுக்கொடியல் மா விற்பனைக்குண்டு. சுகாதார முறையில் பக்கட்டுகளில் அடைக்கப்பட்டு விற்பனையாகிறது. ஓலோவுக்குரிய விலையைக் குறித்து எம்முடன் தொடர்பு கொள்ளவும். புனித மரியாள் மன்றம், எழுவைதீவு.

### தவறிவிட்டது

எஸ் யோகநாதனின் அடையாள அட்டை தவறி விட்டது. கொடுப்பவருக்கு சன்மானம் வழங்கப்படும் சோதி பிரதர்ஸ், காங்கேசன் துறை வீதி, தெல்லிப்பழை.

நவா மினி (உஷா மினி முன்பாக)
12-30, 9-00 மணிக்கு மட்டும்
TIGER'S DON'T CRY SUCCES YOUR'S

10.30. 2.30, 4.45, 7.00 மணிக்கு
CHURCHILLS LEOPARDS

நூற்றுக்கணக்கான

# நெல் மூடைகள் பரந்தனில் அபகரிப்பு

## 10 பேர் கைது

கிளிநொச்சி, பெப். 9

பரந்தனில் நூற்றுக் கணக்கான நெல் மூடைகளையும் பசளை வகைகளையும் டிராக்டர் ஒன்றையும் சீருடையினர் நேற்றுக் கைப்பற்றிச் சென்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:–

கிளிநொச்சியில் இருந்து இரவோடிரவாகப் பரந்தன் பகுதிக்குச் சென்ற சீருடை அணிந்தவர்கள் அங்குள்ள கோயில் ஒன்றில் பதுங்கி இருந்தனர்.

நேற்று அதிகாலை சூடு மிதிப்பு முடிவடைந்து நெல், மூடை மூடையாகக் கட்டப்பட்ட சமயம் பார்த்துச் சீருடையினர் திடீரென அங்கு நுழைந்தனர்.

நெல் அறுவடை செய்யவும் சூடு மிதிக்கவும் அங்கு வந்தவர்களில் பத்துப் பேரைச் சீருடையினர் கைது செய்தனர்.

நூற்றுக்கணக்கான நெல் மூடைகளும், பசளை வகைகளும் அவர்களால் கைப்பற்றப்பட்டன. அங்கு நின்ற டிராக்டர் ஒன்றையும் அவர்கள் அபகரித்துச் சென்றனர்.

மூன்று டிராக்டர்கள் லொறி உட்பட ஐந்து வாகனங்களில் கைப்பற்றப்பட்ட மூடைகள் எடுத்துச் செல்லப்பட்டன என்று கூறப்படுகிறது.

சீருடையினர் பரந்தனில் இருந்து கிளிநொச்சி திரும்பியபோது பரந்தன், கிளிநொச்சிப் பகுதிகளில் பெரும் பதற்றம் நிலவியது.

அதேசமயம் நேற்று நாலாம் வாய்க்கால், இரத்தினபுரம் ஆகிய பகுதிகளுக்கும் சீருடையினர் சென்று தேடுதல் நடத்தினர். ஹெலிக்கொப்டர்களும் தாழப் பறந்து தேடுதல் நடவடிக்கைக்கு உதவின.

### ராஜீவு..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டது. அதைத் தொடர்ந்து மாலைதீவில் பிரதமரைச் சந்திக்க எடுத்த இலங்கையின் முயற்சி தோல்வி அடைந்தது.

இப்படி 'இந்து' நாளிதழில் பிரதம செய்தியாளர் திரு. ஜி. கே. ரெட்டி எழுதியிருக்கின்றார்.

### தமது தாயகம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கிழக்கு என்று தமிழர் தாயகம் பிரிக்கப்பட்டது.

பிரிட்டிஷ் ஆட்சிக்கு முதல் இருந்த அத் தமிழ்த் தாயகத்தில் தான் தமிழர் ஒன்ருக வாழ விரும்புகின்றனர்.

வடக்கு – கிழக்கு இணைப்பு என்ற பேச்சுக்கே இடமில்லை. இணைப்பு என்ற பேச்சை தமிழ் இனத்தைப் பிரிக்க அரசு செய்யும் சூழ்ச்சி இது.

கிழக்குப் பகுதியில் இருந்து ஒரு லட்சம் தமிழ் மக்களை அரசு துரத்தி அடித்து விட்டது. 2 லட்சம் சிங்களவரை குடியேற்ற இப்பொழுது முயற்சிக்கிறது.

இப்படி திரு. அமிர்தலிங்கம் சொன்னுர்.

### கணேசலிங்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

புதல்வர்களும் வந்திருந்தனர்.

சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் விமானத்தில் பூதவுடல் ஏற்றப்படும் சமயம் திரு. அ. அமிர்தலிங்கம், திரு. எம். சிவசிதம்பரம் ஆகியோர் அங்கு பிரசன்னமாகியிருந்தனர்.

பூதவுடல் இன்று ஞாயிற்றுக்கிழமை அவரது தொகுதியான பட்டிருப்புக்கு எடுத்துச்செல்லப்பட்டு பெரிய கல்லாறு சனசமூக நிலையத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருக்கும்.

### யாழ்நகர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்றினுல் கடத்திச் செல்லப்பட்டார்.

சுப்பையா சிவகடாட்சம் என்பவரும் கடத்தப்பட்டுள்ளார். இவரும் இவரது மனைவியும் இரவு 7–30 மணியளவில் விக்ரோரியா வீதியில் காரில் சென்று கொண்டிருந்த போது வாகனம் ஒன்றில் வந்த கோஷ்டி வழிமறித்து திரு. சிவகடாட்சத்தைக் கடத்திச் சென்றது.

இதுசம்பந்தமாகயாழ் வர்த்தகர் சங்கத்திடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

#### கடை அடைப்பு

இதே வேளை நாளை திங்கட்கிழமை யாழ் வர்த்தகர் சங்கம் பூரண கடையடைப்பை நடத்த உள்ளது.

கடந்த 3-ஆம் திகதி யாழ் நகர் 24 மணி செட்டியார் மகாஜன சங்க இனத்தைச்சேர்ந்தஇளம் பெண் ஒருவர் கடத்திச் செல்லப்பட்டதை கண்டித்தே இக்கடையடைப்பு நடைபெறவிருக்கிறது.

இது சம்பந்தமாக யாழ்.நகர் 24 மணி செட்டியார் மகாஜன சங்கம் யாழ். வர்த்தகர் சங்கத்திற்கு விடுத்த வேண்டுகோளைத் தொடர்ந்தே கடையடைப்பு நடக்க இருக்கிறது.

கடத்தலைக் கண்டிக்குமுகமாக 24 மணி செட்டியார் மகாஜன சங்கத்தினர் நாளைக்கு பூரண ஹர்த்தால், மறியல் போராட்டம் நடத்தவும் தீர்மானித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.



# சென் ஜோன்ஸ் வெற்றி

யாழ்ப்பாணம், பெப். 9

நேற்று நடைபெற்ற சிநேகபூர்வமான கிரிக்கெட் ஆட்டத்தில் யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தைத் தோற்கடித்தது.

மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் அடிப்படையில் இந்த ஆட்டம் நடைபெற்றது.

சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய சென். ஜோன்ஸ் அணி ஒதுக்கப்பட்ட 50 ஓவர்களில் 6 விக்கட்டுக்களை இழந்து 216 ஓட்டங்களைப் பெற்றது.

என். ராஜ்குமார் திறமையாக ஆடி 98 ஓட்டங்களைப் பெற்றுர்.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய யாழ். பல்கலைக்கழக அணி 40 2 ஓவர்களில் சகல விக்கட்டுக்களையும் இழந்து 137 ஓட்டங்களை மட்டும் பெற்றது.

சென். ஜோன்ஸ் கல்லூரி ஆடிய இரண்டு சிநேகபூர்வ ஆட்டங்களிலும் வெற்றியீட்டி இருப்பது குறிப்பிடத்தக்கது.

### மெல்போர்ன் கிரிக்கெட்

மெல்போர்ன், பெப். 9

இந்திய—ஆஸ்திரேலிய அணிகள் மோதும் இன்றைய கிரிக்கெட் ஆட்டம் மெல்போர்னில் இலங்கை நேரப்படி காலை 4.25க்கு ஆரம்பமாகும்.

### குண்டு ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ரணையை யாழ் பதில் நீதவான் திரு. க. கேசவன் நடத்தினுர்.

மரண விசாரணையில் சாட்சியமளித்த கந்தசாமி மாணிக்கம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

காலஞ் சென்றவருடன் அவரும் அந்த கட்டுமரத்தில் பயணம் செய்து மயிரிழையில் உயிர் தப்பினுர்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

கடந்த வெள்ளிக்கிழமை கட்டுமரத்தில் ஊர்காவற்துறைக்கு சென்ற நாம் அதே கட்டுமரத்தில் காரைநகர் நோக்கித் திரும்பிக் கொண்டிருந்தோம்.

அப்பொழுது 10-30 மணியிருக்கும் நாம் கரையில் இருந்து 25 யார் தூரம் கடலில் போய்க் கொண்டிருந்தோம்.

காரைநகர் கடற்படை முகாமில் இருந்து ஊர்காவற்துறை பகுதியை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது.

எமது சட்டுமரத்துக்கு அண்மையில் குண்டு ஒன்று வந்து விழுந்து வெடித்தது.

இதனுல் எமது கட்டுமரத்தை செலுத்திக் கொண்டிருந்த கந்தசாமி கமலநாதன் அலறிக் கொண்டு கடலில் சாய்ந்தார்.

அவரது இடுப்பில் இருந்து இரத்தம் பாய்ந்தது.

நான் உடனே அவரை அணைத்துப் பிடித்தபடி படகைத் திருப்பி மீண்டும் ஊர்காவற்துறையை நோக்கி செலுத்தி அவரை ஊர்காவற்துறை ஆஸ்பத்திரியில் சேர்ப்பித்தேன்.

பின்னர் யாழ் ஆஸ்பத்திரிக்கு கொண்டுவரும் வழியில் அவர் மரணமாகிவிட்டார்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

### மூவர் சுடப்பட்டனர்

யாழ்ப்பாணம், பெப் 9

வவுனியாவில் உள்ள தாண்டிக்குளம் என்னும் இடத்தில் ஆயுதப்படையினரால் நேற்று மூவர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இவர்களில் ஒருவர் வயோதிபர் வயலில் வேலை செய்துகொண்டிருந்தபோது சுடப்பட்டார்.

மற்ற இருவரும் சைக்கிளில் வந்துக்கொண்டிருந்தபோது சுடப்பட்டனர்.

### மானபங்கம் ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பறிச்சானில் இரவு நேரங்களில் ஆண்கள் தங்குவது இல்லை.

இதனைப் பயன்படுத்திக் கொண்டு சீருடைதரித்தவர்கள் இளம் பெண்களைத் துன்புறுத்தத் தொடங்கியுள்ளனராம்.

இப்படியான நடவடிக்கைகளுக்குப் பலியானவர்களில் இப் பெண்கள் இருவரும் அடங்குகின்றனர்.

இவர்களில் ஒரு பெண் சீருடையினரால் இரண்டு தினங்களாகத் தடுத்து வைக்கப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டார் என்று திருமலை பிரஜைகள் குழுவிடம் முறையிடப்பட்டது.

அன்று தூது சொல்ல

ஸ்ரீ ஆஞ்சநேயமூர்த்தி
இலங்காபுரிக்கு வருகைதந்தார்.
ஸ்ரீ ஆஞ்சநேய சுவாமியின் திருவருட் துணைகொண்டு
உலகெங்கணும் தூது போக
ரெலிகுளோப்
நாளை
-> இலங்காபுரியின் நன்நகராம் யாழ்ப்பாணம் வருகிறது !
-> விபரம் அனைத்தும் இரண்டாம் பக்கத்தில் அறியத்தருகிறேம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அச்சிடுவோரும் வெளியிடுவோரும்: தஷ்ரு உமா எக்ஸ்போட்ஸ் லிமிட்டெட், 207, மின்சார நிலையவீதி, யாழ்ப்பாணம். அச்சகம்: 15, 8 ஆம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்; வெளியீட்ட திகதி: 09-02-1986